1981 மார்ச் 7]

வசதி அற்ற நிலையிலே, மினி பஸ்கள் விடும் திட்டம் அரசின்பால் உள்ளது. அந்த அடிப்படையில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் மினி பஸ்களை விட உடனடியாக ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கமே பேருந்து வசதிகள் இல்லாத கிராமங்களுக்குப்பேருந்து வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான். அதன் அடிப்படையிலேதான் ஒவ்வொரு கிராமத்திற்கும் சாலைகள் போட்ட பின்னர் பெரிய பேருந்துகள் விடுவதற்குக் காலதாமதம் ஏற்படும் என்ற அடிப்படையில் மினி பேருந்து விடப்படவேண்டும் என்று நடவடிக்கை எடுத்தோம். நான் ஏற்கெனவே பல முறை சொல்லி இருக்கிறேன். திருப்பித் திருப்பிச் சொல்லுவதற்கு எனக்குச் சங்கடமாக இருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமைகள் கொஞ்சம் மோசமாக இருக்கின்றன என்பதால் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்* முடிவுற்றன.

(குறிப்பு).—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. அறிவிப்புகள்.

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கூட அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

இவை என் ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்த பிறகு இவற்றைப் பேரவையில் எடுத்துக் கொள்வதா இல்லையா என்பதற்கான எனது இசைவு குறித்து முடிவு செய்யப்படும்.

---

*ஆ. உடுக்குறியிடாத வினாக்களும் விடைகளும்—626—670 இணைப்பில் பார்க்க.

[1981 மார்ச் 7

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். ஒரு வாரம் ஆகிவிட்டது. இன்னும் அது குறித்து எடுத்துக் கொள்ளப்படவில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வது என்கின்ற முறையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். அந்த அடிப்படையில் இன்றைக்கு திரு. சி. பழனிமுத்து அவர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ள இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் இந்தச் சபையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த முறையை நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைக் கூட்டத்தின் கடைசி நாள் அன்று உறுப்பினர்கள் அதுவரை கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஆகியவற்றைக் குறித்து, சபையில் படிப்பதற்கு அனுமதி கொடுக்கப்படும். உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அது உதவியாக இருக்கும். இன்றைக்குப் பேரவைக் கூட்டத்தின் கடைசிநாள் என்பதால், அந்த முறை அனுஷ்டிக்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவை நிகழ்ச்சிகள் இன்றோடு ஒத்திவைக்கப் பெற்றாலும் மீண்டும் நிதி நிலை அறிக்கை விவாதத்திற்காக கூட இருப்பதால், அதிகமான பிரச்சினைகளைக் கொண்டு வந்து விவாதிப்பதற்கு நிறைய வாய்ப்புக்கள் உறுப்பினர்களுக்கு இருக்கின்றன.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, 54வது விதியின் கீழ் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை கொடுத்து நான் அறிவிப்பு கொடுத்து இருந்தேன். திருப்பூர் நகரத்தில் உள்ள 25,000 பனியன் தொழிலாளர்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து இப்போது கேட்பது சரியல்ல. கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப் பெற்றுள்ளன. அதற்கான தகவல்கள் வந்தவுடன் அவையில் வைக்கப்பெறும். நானே அதற்கான பதில்களைத் தருகிற அளவில் நிலைமைகள் இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் இரண்டு உரிமை மீறல் குறித்த பிரச்னைகளைக் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன் அவர்கள் உரிமை மீறல் பிரச்னைகள் கொடுத்து இருக்கிறார் என்று ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறேன். இரண்டா, மூன்றா என்று நான் குறிப்பிடவில்லை. கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் என் ஆய்வில் உள்ளன.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இங்கே அங்கத்தினர் அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பியபோது 'அது என் ஆய்வில் உள்ளது' என்று சொல்லிவிட்டீர்கள். அது என்ன அறிவிப்பு என்று புரியவில்லை. திரு. மணிமாறன் அவர்கள் சில பிரச்னைகள் குறித்து திரு. துரைமுருகன் மீது எழுப்பியுள்ளார்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் குழப்பம் அடையக் கூடாது. திரு. மணிமாறன் கொடுத்துள்ள பிரச்னை வேறு. திரு. துரை முருகன் கொடுத்துள்ள பிரச்னைகள் வேறு. இரண்டையும் சேர்த்து, அவர் இவர் மேல் கொடுத்துள்ளார், இவர் அவர் மேல் கொடுத்துள்ளார் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். (குறுக்கீடு) நான் அறிவிப்பை மீண்டும் படிக்கிறேன். ''மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார். மாண்புமிகு திரு. துரை முருகன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த பிரச்னைகள் குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளார். இவை என் ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்த பிறகு இவற்றைப் பேரவையில் எடுத்துக்கொள்வதா இல்லையா என்பதற்கான எனது இசைவு குறித்து முடிவு செய்யப்படும்.''

இன்றைய தினம் மாண்புமிகு எல். இளையபெருமாள் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அதுவும் என் ஆய்வில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

ஆத்தூர் காவல் துறையினர் ஓர் இளைஞரைத் தாக்கியதாகச் சொல்லப்பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

''15-2-1981 அன்று ஆத்தூர் காவல் துறையினர் 20 வயது ராஜு என்பவரைத் தாக்கியதன் விளைவாக அவரது இரு கண்களும் பாதிக்கப்பட்டு அவர் பார்வை இழந்த காரணத்தால் அப்பகுதி பொது மக்களிடத்திலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து'' விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு, திருவாளர்கள் சி. பழனிமுத்து, திருமதி இராசாம்பாள், நா. சுந்தரராஜ் ஆகியோரிடமிருந்து தீர்மானங்கள் வந்துள்ளன. இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS